| O.S.No. 440/2019 | PW1 : திருமதி. ரமா<br>க/பெ. திரு. ஜோதிகண்ணா | 11-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>5–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

1. என் சகோதரி அனிதா தாக்கல் செய்த OS No. 54/2014 வழக்கில் என்ன முடிவானது என்று எனக்கு தெரியாது. மேற்படி வழக்கானது எனது சகோதரி 5–ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை 5–ம் பிரதிவாதிக்கு எதிராக தாவா எண். 02/2014 வழக்கு தாக்கல் செய்து இருவருக்கும் இடையே ஏற்பட்ட கிரைய உடன்படிக்கையை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிய பரிகாரத்தை பொருத்து தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

2. 5–ம் பிரதிவாதி சொத்தினை கிரையப்பதிவு செய்துகொடுக்க வேண்டும் என்று தாவா எண். 143/2019 என்ற வழக்கினை செய்யாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் 5–ம் பிரதிவாதி சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஆஜராகாததால் அவருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை பயன்படுத்திக்கொண்டு நானும், எனது தந்தை, சகோதரி சேர்ந்து 12.01.2022–ம் தேதி சட்டத்திற்கு புறம்பாக கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. மீண்டும், அந்த வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு 5–ம் பிரதிவாதியின் பெயரில் கட்டாயம் கிரைய பத்திரம் செய்து கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பானது என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

3. தாவா 2, 3 அயிட்ட சொத்துக்களை கிரையம் பெற்றவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யாமல் 5-ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 5-ம் பிரதிவாதி கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்ட சொத்தினை நாங்கள் சட்டத்திற்கு புறம்பாக கிரையம் பெற்றது தவறு என்று சொன்னால் தாவா எண்.143/2019 வழக்கு நிலுவையில் இருந்தது எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு நிலுவையில் இருப்பது தெரிந்திருந்தால் நான் பத்திரப்பதிவு செய்திருக்கமாட்டேன் என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கு நிலுவையில் இருப்பது என்ற விவரம் என் தந்தைக்கு தெரியும் என்றாலும், அவர் நீதிமன்றத்தினை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் சட்டத்திற்கு புறம்பாக எனக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. எனது தந்தை செய்த கிரையமானது சட்டத்திற்கு புறம்பானது என்று தெரிகிறதா என்றால் நீங்கள் சொல்லிதான் தெரிகிறது.

5. எனக்கு 1999-ம் ஆண்டு திருமணம் ஆனது. எனது அக்காவிற்கும் அதே ஆண்டுதான் திருமணம் ஆனது. எனது தந்தைக்கும் சித்தப்பாவிற்கும் எப்போது பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் 1991-ம் ஆண்டு நடந்தது. என் அத்தைகள் எந்த ஆண்டு அக்குவிடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது தந்தையின்தனிப்ட்ட சொத்து என்றும், மகள்களுக்கு அதில் உரிமை இல்லை என்று தாவா எண். 54/2014 வழக்கில் என் தந்தை எதிர் வழக்குரை தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது, எங்களது தாத்தா சொத்தில் எங்களுக்கு பாகம் உள்ளது.

6. வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் 1999-ம் ஆண்டிலேயே பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கலாம் என்றாலும், காலம் கடந்து 5-ம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது தந்தை 5-ம் பிரதிவாதிக்கு A ஷெட்யூல் சொத்தினை கிரையம் செய்து கொடுக்கபோகிறார் என்ற விஷயம் எப்போது எனக்கு தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தினை அனுபவித்து வந்தீர்களா என்றால் இல்லை, எனது தந்தை அனுபவித்து வந்தார். என் தந்தை தாவா சொத்தினை 3, 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்ற விஷயம் தெரியுமா என்றால் நான் வெளியூரில் இருப்பதால் அதை பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை.

7. A ஷெட்யூல் சொத்தில்தான் உரிமை கோருகிறேன் என்றாலும், 3, 4 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த சொத்தில் உரிமை கோரவில்லை என்றாலும், A ஷெட்யூல் சொத்துதான் எனக்கு பக்கமாக உள்ளது. தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், நீதிமன்றத்தின் நேரத்தினை வீணடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தாவாவினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் என்னுடைய தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது நானும், எனது சகோதரிகளும், எனது தந்தையும் சேர்ந்து தாவா சொத்தினை பத்திரப்பதிவு செய்துகொண்டோம் என்றால் அந்த வழக்கு நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ள நிலையில் தெரியாது என்று நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்தோடு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**